# A DEVELOPMENT PLAN FOR THE UPLIFTMENT OF QUALITY OF LIFE OF THE PEOPLE IN THE THAMPALAGAMAM DIVISIONAL SECRETARIAT DIVISION

LIBRARY
18-9-1996
EASTERN UNIVERSITY Sri Lanka

By

MR. INPARATNAM THAYALAN

Index No : COM 84

A dissertation submitted to the Faculty of Commerce an Management, Eastern University, Sri Lanka, as a partial fulfilment c the requirements of the Bachelor of Commerce degree (B.Com).

**DEPARTMENT OF COMMERCE**

**FACULTY OF COMMERCE AND MANAGEMENT**

**EASTERN UNIVERSITY , SRI LANKA**

**1996.**

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| அத்தியாயம் | - 01 | அறிமுகம் | 01 - 08 |
| அத்தியாயம் | - 02 | நூலாய்வு | 09 - 26 |
| அத்தியாயம் | - 03 | தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவு பற்றிய அறிமுகம் | 27 - 36 |
| அத்தியாயம் | - 04 | விவசாயம் ✓ | 37 - 50 |
| அத்தியாயம் | - 05 | கல்வி | 51 - 66 |
| அத்தியாயம் | - 06 | மீன்பிடி ✓ | 67 - 71 |
| அத்தியாயம் | - 07 | சுகாதாரம் ✓ | 72 - 82 |
| அத்தியாயம் | - 08 | வீடமைப்பு ✓ | 83 - 93 |
| அத்தியாயம் | - 09 | கூட்டுறவு ✓ | 94 - 102 |
| அத்தியாயம் | - 10 | சிறுகைத்தொழில் ✓ | 103 - 109 |
| அத்தியாயம் | - 11 | சுயதொழில் ✓ | 110 - 115 |
| அத்தியாயம் | - 12 | புனர்வாழ்வு ✓ | 116 - 125 |
| அத்தியாயம் | - 13 | புனரமைப்பு ✓ | 126 - 134 |
| அத்தியாளம் | - 14 | செயற்திட்ட வடிவமைப்பு | 135 - 145 |
| பின்னிணைப்பு | : | அட்டவணைகள், வரைபடங்கள் | 146 - 150 |

உசாத்துணை நூல்களும், அடிக்குறிப்பும்

## ஆய்வறிக்கைச் சுருக்கம்

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவானது 11 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும், 1993ம் ஆண்டுக் கணிப்பீட்டின்படி 29123 பேரைக் கொண்ட சனத்தொகையையும் கொண்டது. இப் பிரிவினது வாழ்க்கைத்தர விருத்தி தொடர்பாக இங்குள்ள ஒவ்வொரு துறையினதும் பிரதான இலக்குகளையும், அதற்கான பலம், பலவீனம், சந்தர்ப்பத்தையும் அப்பிரதான இலக்கை எவ்வாறு வெற்றியடையலாம் என்பதையும் மிகச் சுருக்கமான முறையில் அவதானிப்போமாயின் ....

விவசாயம்:- இப்பிரிவு மக்களின் முக்கிய துறையாகக் காணப்படும் விவசாயத்தின் உற்பத்தியை அதிகரிப்பதே முக்கிய இலக்காக உள்ளது. ஏற்ற கூடிய அளவு நில வசதி பலமாக இருந்த போதிலும், நிதிப்பற்றாக் குறையும், பாரம்பரிய முறைகளைக் கைக்கொள்ளலும் பலவீனமாக உள்ளது. எனவே எதிர்காலத்தில் இப்பற்றாக்குறையை நீக்குவதுடன் நல்லின விதைகளையும் பயிரிட்டு உற்பத்தியை அதிகரிக்கலாம்.

கல்வி:- இப்பிரிவில் மிகவும் பின் தங்கிய நிலையில் இருக்கும் கல்வியை உயர்த்துவதே பிரதான இலக்காகும். இதன் பொருட்டு 20 பாடசாலைகள் இயங்குவதுடன், போதிய அடிப்படை வசதிகளையும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களையும் கொண்டமையாதது பலவீனமாகும். எதிர்காலத்தில் இதனை நிவர்த்தி செய்து மாணவர்களிடையே போட்டித் தன்மையை உருவாக்க வேண்டும்.

மீன்பிடி:- இங்கு நன்னீர் மீன்பிடி, இறால் வளர்த்தல், நண்டு பிடித்தல் என்பன சிறந்த முறையில் அமைத்தலே பிரதான நோக்கமாகும். ஆனால் பெரும்பாலானோர் விவசாயத்தில் ஈடுபடுவதும், போதியளவு நிதி வசதி இன்மையும், சுயதேவைப் பூர்த்தியும் இங்கு முக்கியம் பெறுகின்றது. எனவே இத்துறையிலும் மக்கள் ஈடுபாடு காட்டுவதோடு வியாபார ரீதியாகவும் இதனை மேற்கொள்ள வேண்டும்.

சுகாதாரம்:- இப்பிரிவு மக்கள் முழுவதும் பயன்படுத்தக் போதிய வசதிகளுடனும், வைத்தியர், ஊழியர்களுடனும் வைத்தியசாலையை அமைக்கவேண்டும். இதற்கு போதிய நிதி தேவைப்படுவதுடன், சேவைமனப்பான்மையும் அவசியமாகும். மேலும் மக்களுக்கு சுகாதாரக் குறிகாட்டுகளை எடுத்துக்கூறுவதுடன், உளநோயைக்கட்டுப்படுத்த காலச்சாரக் காரணிகளிலும் கவனம் எடுத்தல் நல்லது.

வீடமைப்பு:- 2000ம் ஆண்டளவில் யாவருக்கும் புகலிடம் என்ற அடிப்படையில் இப்பிரிவு மக்களின் இருப்பிட வசதியை அதிகரித்தல் முக்கிய இலக்காகும். இதற்கு போதிய நிலப்பரப்புக்கள் இருந்த போதும் நிதித் தட்டுப்பாடு, பொருட் தட்டுப்பாடும் பலவீனமாக உள்ளது. இதனை நிவர்த்தி செய்ய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையும், ஏனைய நலன்புரி அமைப்புக்களும் மானிய, கடன் வசதிகளை வழங்க வேண்டும்.

கூட்டுறவு:- மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு, இப்பிரிவு வளங்களையும் பயன்படுத்தி சேவை புரிவதே பிரதான இலக்காகும். இதற்கு மக்கள் கேள்வி அதிகமாகவும், குறைந்த விலையில் மக்கள் கொள்வனவுகளை செய்ய முன்வருவதுமாகும். மாறாக ஒழுங்கற்ற நிர்வாகமும் ஊழலும் பலவீனமாகும். எனவே நிர்வாக சபையை மாற்றியமைத்து, மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதோடு, இயங்காத கிளைகளையும் இயங்கவைக்க வேண்டும்.

சிறுகைத்தொழில்:- உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தலும், வேலைவாய்ப்பை அதிகரித்தலும், கைத்தொழில் மயமாக்க நடவடிக்கைகளைப்புகுத்தலும் பிரதான இலக்காகும். இங்கு மனிதவளம் பலமாகவும், இம் முயற்சிகளில் மக்களை ஈடுபடுத்தாமலிருப்பது பலவீனமாகவும் உள்ளது. இதனை நிவர்த்தி செய்வதோடு கைத்தொழிலின் பலன்களை மக்களுக்கு எடுத்துரைத்து வியாபார ரீதியாக வெற்றி காணவைக்க வேண்டும்.